**கவனிக்க.-** 2006.06.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1451 - 2006 ජූනි 23 වැනි සිකුරාදා - 2006.06.23**

1451 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 586 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 586 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூன் 30 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, யூன் 16 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, வெல்லம்பிட்டி, கொட்டுவில, இல. 357/B ஐச் சேர்ந்த கதலுவ லியனகே இன்டன் ஆகிய நான் 2005, யூன் 07 ஆந் திகதிய மதிப்பீட்டு இல. 874 எனும் பகிரங்க நொத்தாரிசு பியதிலக கவரம்மானவினால் உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் வெலியூம் 302, போலியோ 149 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள கதனுவ லியனகே புத்திக்க சஞ்சீவவுக்கு வழங்கப்பட்டுள்ள அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்வதாக இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

இவ் இரத்துச்செய்தல் 2006.06.07 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும். இத்திகதி முதல் அவரால் மேற்கொள்ளப்படும் அவரது எந்த நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன்.

கதலுவ லியனகே இன்டன் சுஜீவ.

6-569

---

# ஏல விற்பனைகள்

## ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் - ஜாஎல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். யூ. விஜேதுங்க அவர்களால் 2000, சனவரி 7 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 583/200 இல் துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட, கொஸ்கஹவத்த என அழைக்கப்படும் காணியானது கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்துமுடன் மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அளுத்குறுகோரளை ராகம்பற்றுவில் பட்டகம தெற்கில் அமைந்துள்ளது-ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 22.26 பேர்ச்)**

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேலே விரிக்கப்பட்ட சொத்தை, நான் பகிரங்க ஏலத்தில் அதேயிடத்தில் 2006, யூலை 13 மு. ப. 11.00 இற்கு விற்பனை செய்வேன்.

சொத்தை ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்தவரும், கடமைப்பட்டவருமான சுபசிங்க ஆரச்சிகே வசந்த ரோஹித்த சுபசிங்க, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். டீ. அல்விஸ் அவர்களால் 2004.03.03 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 1038 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.

**தீர்மான அறிவித்தல்.**- தயவுசெய்து 2006.03.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.03.23 ஆந் திகதிய "ஜலன்ட்", "திவயின", "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலத்தின் இறுதியில் சித்திகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூரதிகார சபைக்கான வரியாக ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% ;
(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்கு நொத்தாரிசு கட்டணமாக ரூபா 2000 ;
(5) எழுதுவினைஞரினதும் கூப்பிடுவோரினதும் ஊதியம் ரூபா 500 ;
(6) மொத்த விளம்பரச் செலவு.

கொள்வனவு விலையின் எஞ்சிய 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டில் வைப்பிலிடப் படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள், காணி உறுதி, ஏனைய தொடர்புடைய ஆவணங்களை, ஜா-எல கிளை ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட், முகாமையாளரிடம் பரீட்சித்துப் பெறலாம். தொலைபேசி இல. 4833348 அல்லது ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் தலைமை யலுவலக கடன் மேற்பார்வை மற்றும் மீள் பெறுகைத் திணைக்கள பிரதம முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 2661815, 2661816.

ரஞ்ஜித்த எஸ் மஹநாம,
சமாதான நீதவான் (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர், ஏலவிற்பனையாளர்.

மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டை.
தொலைபேசி : 2863121

6-593

---

## மக்கள் வங்கி - கோர்பறேட் 1 ரிகவரீஸ்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை

**ஓர் பெறுமதியான சொத்துக்கான ஏல விற்பனை**

**யங் இன் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் முன்பு K. B. லங்கா (பிரைவேட்) என அழைக்கப்பட்டது இப்போது K. L. டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட் என அழைக்கப்படுகிறது**

**மேல் மாகாணம், நீர்கொழும்பு பதிவானர் பிரிவு கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோறளை வடக்கு (A) தூனகஹா பத்து படால்கம மற்றும் தெல்பகடவர கிராமங்களில் அமைந்துள்ள படால்கம எஸ்டேட் என அழைக்கப்படும் அனுமதிபெற்ற அளவையாளர் H. D. ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993.05.24 திகதியும் 284 A இலக்கமும் கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 2 என குறிப்பிடப்பட்டுள்ள**

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு கட்டிடங்கள் பயிர்கள் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள் இணைப்புகள் மற்றும் யாவும் உட்பட**

**(விஸ்தீரணம் : 9ஏ. 0றூ. 12.8 பே.)**

**மேற்கண்ட வளவில் அமைந்துள்ள கீழ்க்கண்ட இயந்திரங்கள் உட்பட ஜெனரேட்டர் வகை, வொல்வோ பென்டா 500 கி. வாற் ஜெனரேட்டிங் செட் மொடல் TAD 1631 GE வுடன் ஸ்டெம் போர்ட் ஆல்டனேட்டர் ஜெனறேட்டர் இணைக்கப்பட்டுள்ளது.**

**கீழ்க்கண்ட காணித்துண்டின் மேல் உள்ள பாதை உரிமையுடன் :**

**மேல் மாகாணம், நீர்கொழும்பு பதிவாளர் பிரிவு கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோறளை வடக்கு (A) தூனகஹா பத்து படால்கம மற்றும் தெல்பகடவர கிராமங்களில் அமைந்துள்ள படால்கம எஸ்டேட் என அழைக்கப்படும் காணியின் அனுமதிபெற்ற அளவையாளர் H. D. ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993.05.24 திகதியும் 284 A இலக்கமும் கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 4 என குறிப்பிடப்பட்ட (பாதைக்காக ஒதுக்கப்பட்டது) பிரித்து நிர்ணயிக்கப் பட்ட காணித்துண்டு**

**(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 14.2 பே.)**

மக்கள் வங்கியினால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2006, யூலை மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வோம்.

**தீர்மான அறிவித்தல்.**- தயவு செய்து 2005.02.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2005.02.02 திகதிய "டெய்லிநியூஸ்", "தினமின", "தினகரன்" ஆகிய புதினப் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வன வாளர் ஏலத்தின் முடிவில் பின்வரும் கட்டணங்களை காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) ஒவ்வொரு விற்பனைக்கும் கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி கொள்வனவு விலையின் 1% (ஒரு வீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறு ஏதாவது கட்டணங்கள் ஏதுமிருப்பின் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்முதல் விலையில் மீதி 90% கட்டணத்தை விற்பனை நாள் முதல் 30 நாட்களுக்குள் "கொழும்பு 2, 'தலைமையகக் கட்டிடம்', 10 ஆவது மாடி, மக்கள் வங்கி, கோப்பறேட் 1 ரிகவரீஸ், தலைமை முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2334265, 2481604, 2481430, ஃபெக்ஸ் : 2481605

மேற்கூறப்பட்ட முகவரியில் காணி உறுதி மற்றும் விபரங்களையும் பெறலாம். குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் கூறப்பட்ட கட்டணம் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட 10% தொகையினை பறிமுதல் செய்யவும், சொத்தினை மீள் விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசதுறை
வங்கிகளுக்கான பட்டய ஏலதாரர் மற்றும்
மதிப்பீட்டாளர் மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகம் :* |
|---|---|
| *24, டொரிங்டன் வீதி,* | *55ஏ, தர்மபால மாவத்தை,* |
| *கண்டி.* | *கொழும்பு 03.* |
| *தொலைபேசி இல. : 081-2227593* | *தொலைபேசி இல.: 2441761* |
| *தொலைநகல் இல. : 081-2224371* | *தொலைநகல் இல.: 2448526,* |
| | *ஈமெயில் :* samera@sri.lanka.net |

*6-594*

---

**ஹட்டன் நஷனல் வங்கி - கம்பஹா கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடப்பட்ட (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**பெறுமதி வாய்ந்த வீட்டுச் சொத்தின் பகிரங்க ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளையின் தாசியபற்றுவில் நெதகமுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் போகாவத்தை மறுபெயர் கொஸ்கஹவத்தை என அழைக்கப்படுவது மான காணியின் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. பி. கஸ்தூரிரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 25.02.1984 ஆந் திகதிய 1521 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித் துண்டு 3 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்.**

**1521 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வீதிப் பாதைகளை பாவிக்கும் உரிமையுடன் சேர்த்து.**

**விஸ்தீரணம் லொட் 3 - 34.2 பேர்ச்சஸ்**

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். என். எம். டபிள்யு. ராஜகருனா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001.01.23 ஆந் திகதிய இலக்கம் 19186 முறி மீது வருமதியான கொடுப்பனவில் பாலஸூரியகே ஸிரிஸேனவும் மற்றும் நாரனபிடி ஹங்காவத்த அப்புஹாமிலாகே ரூபானி மறுபெயர் ரன்ஜனி ஜயலத் கடனாளர்களாகத் தவறியுள்ள தாலும்,

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டடால் என்மீது வழங்கப்பட்டுள்ள அனுமதியின் கீழ் வங்கிக்குக் கிடைக்க வேண்டிய கடன் பணத் தொகையையும் வேறு இறுப்பனவுகளும் ஏலவிற்பனைச் செலவுகளும் உட்பட எல்லாச் செலவுகளையும் பெற்றுக்கொள்வதற்காக கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்தை 2006 ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவத்தல்களுக்கான.**- 2006.02.10 ஆந் திகதி அரசாங்க வர்த்தமானியையும் 2006.02.14 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்", "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை .**- கம்பஹா உடுகம்பல உள்ளாக கொடுகொட, சீதுவ பாதையில் நெதகமுவ உப தபால் அலுவலகமும் லக்மாலி டிரேடர்ஸ் இடையில் இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏல விற்பனையில் இறுதியில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களைப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையில் 10% ;
2. உள்ளூர் ஆட்சிக்கான விற்பனை வரி 1% ;
3. ஏலதாரரின் தரகுப் பணமாக கொள்வனவு விலையில் 2 1/2% ;
4. விற்பனை பத்திரத்தைத் தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000 ;
5. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

விலைக்கு வாங்கிய பணத்தின் 90% மிகுதிப் பங்கு பணத்தை ஏல விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களக்குள் கொழும்பு 10, டி. பி. ஜயா மாவத்தையில் அமைந்துள்ள இல. 479, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பிரதான அலுவலகத்தில் சிரேஷ்ட முகாமையாளர் (கடன் மேற்பார்வையாளரும் மீட்டுப் பெருபவரும்) க்கு செலுத்தப்பட வேண்டும். தொ. பே. 2661815, 2661819,

30 நாட்களுக்குள் மிகுதிப் பணத்தை செலுத்தாவிட்டால் தற்போது செலுத்தியுள்ள கொள்வனவு விலையில் 10% மீண்டும் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கும் மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைப்பத்திரமும் வேறு ஆவணங்களையும் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் கம்பஹா கிளையினால் தொ. பே. இலக்கம் 0334-670189 அல்லது மேலே குறிப்பிட்டுள்ள பிரதான காரியாலயத்தில் சட்ட செயலாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

என். எச். பீ. எப். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும்
மதிப்பீட்டாளரும், உத்தரவுபெற்ற ஏலவிற்பனையாளரும்.

சட்டத்தரணிகளின் அலுவலகக் கட்டிடம்,
இல. 34/31, 32, புதுக்கடை,
கொழும்பு 12.

6-603

---

### மக்கள் வங்கி - பேராதனை கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால்
திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க,
மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான
விற்பனை அறிவித்தல்

**ஆதனம் ஏல விற்பனை**

**மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், யடிநுவர கங்கபலாத்த கோரளே ஏதண்டுவாவ அல்லது அந்தன்கமயில் அமைந்துள்ள பேகாமுலவத்த அல்லது ஏதண்டுவாவ ஆகிய பாதையில் வத்த என்றழைக்கப்படும் காணியை உத்தரவுபெற்ற அளவையாளர் ஆர். சீ. ஓ. த. லாமொட் அவர்களால் 1967.07.06 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 3335 ஆம் இலக்கங்கொண்ட மூல வரைவு படத்தின் லொட் இலக்கம் 07 என காட்டப்பட்டுள்ள பேர்ச்சஸ் ஐந்து (ஏ00. றூ00. பே05.) விலாசமுள்ள காணியும் அங்கே அமைந்துள்ள மூன்று மாடிக் கட்டிடமும், கூறப்பட்ட மூலவரைவு படத்தில் 10 ஆம் லொட் இலக்கத்தைக் கொண்ட பேர்ச்சஸ் மூன்று விலாசமுள்ள காணியில் கிணற்றில் நீர் எடுக்கும் உரிமையும்,**

மக்கள் வங்கியால் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு 2006, ஒகத்து 17 ஆந் தேதி மு. ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் ஸ்தலத்தில் வைத்து எம்மால் விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 2002.10.18 ஆந் தேதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையையும் 2002.10.10 ஆந் தேதிய "டெயிலி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும், பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஏலவிற்பனை தீர்மான அறிவித்தலுக்குக் கவனம் செலுத்தவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** கொழும்பு கண்டி பாதையில் பேராதனை நகரத்திலிருந்து ஒரு மைல் அளவில் சென்ற உடன் பாதையின் இடது பக்கத்தில் (நிவ் ரத்ன ஸ்டோர்ஸ்) என்ற இடத்தில் இக்காணி அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.-** ஏலவிற்பனை முடிந்ததும் வெற்றி பெறும் விலைக்கோள்வியாளர் பின்வரும் தொகைகளைக் காசாகக் கொடுக்கவேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10 % ;

(2) உள்ளூரதிகாரச் சபை வரிகளாக கொள்வனவு விலையின் 1 % ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணமாகக் கொள்வனவு விலையின் 2 1/2 % ;

(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலங் கூறுபவர் கட்டணமாக ரூ. 500;

(5) விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணம் இருப்பின், அது ;

(6) விற்பனையை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனை செய்யப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக மக்கள் வங்கி கண்டி பிரதேச பிரதான அலுவலகத்திலுள்ள பிரதேச முகாமையாளரிடம் செலுத்தப்பட வேண்டும்.

உரித்து உறுதிகளையும் ஏனைய விவரங்களையும் பெற மேலே குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 081-2234283 ; தொலைநகல் இல. : 081-2223017.

உரிமை ஒப்பனைகளும், ஏனைய அதற்குரிய விவரங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகை 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால், தற்போது செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையின் 10% திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது என்பதுடன் மீண்டும் ஆதனத்தை விற்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
அரச மற்றும் தனியார் வங்கிகளின்
இலங்கையின் முன்னோடி பிரசித்தி பெற்ற
ஏலதாரர்களும் நீதிமன்ற ஆணையாளர்களும்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகம் : |
| 24, டொறிங்டன் வீதி, | 55 ஏ, தர்மபால மாவத்தை, |
| கண்டி. | கொழும்பு 3. |
| தொலைபேசி : 081-2224371, 081-2227593 | தொலைபேசி : 011-2448526, 011-5752214 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகலி : 011-2448526, 011-2575214 |

ஈமெயில் : samera@sri lanka.net

6-631

## இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவு அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

கடன் தொடர்பு இல. : 831110-திரு. லலித் விக்ரமரத்ன

"இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.01.06 ஆந் திகதி 1427 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 02.01.2006 ஆந் திகதி "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப் பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 134, பெத்தகான றோட், கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் பீ. கே. ஈ. சேனாதிபதி 2006.07.22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்குஅதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது."

#### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், றைகம் கோரளை கும்புகேற்பற்றுவில் ஹொரணை பிரதேச சபை எல்லைகளுள் கும்புகேயில் அமைந்ததும் பிட்டவலலந்த (ரி. பி. 138161) என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. டபிள்யு. அபேசிங்ஹ தயாரித்த 1992, பெப்புருவரி 17 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 4110 இல் விவரித்த துண்டு 11பீ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு 11ஏ யும் ; கிழக்கில் : துண்டு 11சியும் ; தெற்கில் : வரைபடம் இல. 575 இல் துண்டு 10 ஆம் ; மேற்கில் : கிராம சபை றோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4110 இன்படி இருபத்தெட்டு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 28.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது ஹொரணை காணிப்பதிவத்தில் சி 113/191 இல் பதிவு செய்யப்பட்டது.

பீ. ஆர். குலரட்ன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹொரணை கிளை

6-632

B 4 - B 079275

## பகிரங்க ஏலவிற்பனை

### கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலே

கொழும்பு 01, ஸ்ரீமான் பாரோன் ஜயதிலக மாவத்தை, இல. 57 கொண்ட இடத்தில் ஒரு கிளை அலுவலகமும்/அல்லது ஒரு வியாபார நிறுவனம் இருக்கக்கூடிய கொழும்பு 01, பிரிஸ்டல் வீதியில், இல. 21 கொண்ட இடத்திலே கொமர்ஸல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்

வழக்காளி.

வழக்கு இல.
16080/எம்.பீ.

எதிர்

கொழும்பு 12, புதுக்கடை, இல. 93 கொண்ட இடத்திலே டென்லோனல் எக்ஸ்போ லிமிட்டெட் தற்போது இல. 87, நுககஹ பாதை, கட்டுநாயக்க.

எதிராளி.

மேல் இலக்கம் கொண்ட வழக்கின் அறிக்கையில் உட்புகுத்தப்பட்டுள்ள 1991 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 9 ஆந் திகதிய தீர்வை (சான்றுப்பத்திரம் இதற்கு இணைக்கப்பட்டுள்ளது) மூலம் நாலு இலட்சத்து தொண்ணூற்றிமூவாயிரத்து எழுநூற்றறுபத்தொரு ரூபா எண்பத்திமூன்று சதம் (ரூ. 4,93,761.83) பணம் 1991, ஒற்றோபர் மாதம் 9 ஆந் திகதி தீர்வைத் திகதியின் திகதிவரை வருடத்திற்கு (24%) வீதம் வட்டியும், அதிலிருந்து தீர்வையாக்கப்பட்ட பணத்தை முற்றாகச் செலுத்தி முடிக்கும்வரை மொத்தப் பணத்திற்கு வட்டியும், வழக்குச் செலவும், அதற்காக மேலும் வட்டியும் செலவும் அறவிட்டுக்கொள்வ தற்காக என் மீது மேற்கூறிய நீதிமன்றத்தினால் விநியோகித்துள்ள சிறப்புரிமைப் பத்திரத்தின் பிரகாரம் மேல் பெயர் குறிப்பிட்ட எதிராளிக்குச் சொந்தமான இங்கு கீழ் அட்டவணையில் விபரமாகக் காட்டியிருக்கும் அசையாத சொத்து.

2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 11.30 க்கு அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

#### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு காணிப்பதிவு செய்யும் பிரிவில் கட்டுநாயக நகரசபை எல்லைக்குள் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள கொரககஹவத்தை எனும் காணியில் 'சீ' துண்டு என்பதாக உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. கே. விஜயரத்னம் என்பவரால் தயாரிக்கப்படும் நீர்கொழும்பு மாவட்ட காணிப்பதிவு செய்யும் காரியாலயத்தில் சீ 644/196 இல் பதிவுசெய்திருக்கும் இல. 3/1982 உடன் 1982, சனவரி மாதம் 15 ஆந் திகதிகொண்ட வரைபடத்தின் பிரகாரம் அதற்கு எல்லைகள்- வடக்கிற்கு : அந்த வரைபடத்தில் காட்டப்படும் இந்தக் காணியிலேயே 'டீ' நிலத்துண்டு, 10 அடிப் பாதைக்கு ஒதுக்கிய பங்கும் ; கிழக்கிற்கு : இந்த வரைபடத்திலேயே காட்டப்படும் மேற்படி காணியிலேயே 'பீ' நிலத்துண்டு ; தெற்கிற்கு : கே. எலிஸ் சில்வாவினதும் ஏனையவர்களின் காணியும் ; மேற்கிற்கு : நுககஹ பாதை ஆகிய மேற்கூறிய எல்லைகளுக்குள் அதன் விஸ்தீரணம் இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) எனும் ஹெக்டயார் (0.0505857) ஆகும்.

**ஆதனத்திற்குள் பிரவேசித்தல்.**- கொழும்பு-நீர்கொழும்பு பாதை, கட்டுநாயக்க விமான நிலையம், சந்தியைத் தாண்டி மீற்றர் 24 தூணைத் தாண்டி 20 யார் அளவு முன்னே சென்றதும் வலது கைக்கு நுககஹ பாதை இருக்கின்றது. அந்தப் பாதையில் 200 யார் அளவு முன்னே சென்றதும் ஒரு வளைவு சந்திக்கும். அந்த வளைவுடன் இடதுகைப்பக்கமாக இருக்கும் பாதையில் முதலாவது வீடாகும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை முடிந்தவுடனே கொள்வனவாளரால் கொள்விலையில் நூற்றுக்கு இருபத்திநான்கு (24%) ம், நீதிமன்றத்தினால் அனுமதித்துள்ள கட்டளைச் சுற்றறிக்கைப் பிரகாரம் ஏலதாரரின் கட்டணம் நூற்றுக்கு இரண்டரை (2 1/2%) மும், அரச கட்டணமும், உள்ளூராட்சி கட்டணமும், ஆக நூற்றுக்கு ஒருவீதம் (1%) மும், ஏலவிற்பனைக்கான சகல செலவுகளும், அந்த நேரத்திலேயே ஏலதாரருக்குச் செலுத்தல் வேண்டும். மேலும், கொள்விலையின் மிகுதிப் பணத்தை 30 நாட்களுக்குள் நீதிமன்றத்திலே வைப்புச் செய்தல் வேண்டும்.

**மேல் விபரத்திற்காக.**- முகாமையாளர், கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் லிமிட்டெட், கொழும்பு 01, இல. 21, பிரிஸ்டல் வீதி.

இந்து ஹேவாவிதாரன,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
ஏலதாரர், சமாதான நீதவான்.

இல. எச்-1/16, சான்சிஆரச்சி வத்த,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 0777-178182, 0773-186624.

6-652

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்- கொள்ளுப்பிட்டி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட சட்டம்) 4 ஆம் பிரிவு

**பெறுமதிமிக்க வசிப்பிட/வர்த்தக சொத்து கம்பளை நகர சபை எல்லைக்குட்பட்ட கம்பளை-நாவலப்பிட்டி பெருந்தெருவுக்கு எதிர்த்தாகவுள்ள 3 ஆம் ஒழுங்கை, தேசிய வீடமைப்பு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட போவத்துர பகுதி பிரித்தெடுக்கப்பட்ட மரியாவத்தை எனும் காணியில் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 6.03 பேர்ச்சஸ் பரப்பளவானதாகும் ஏல விற்பனை**

*(இவ்வாதனம் ஸஹாபுதீன் மொஹமட் பரூஸ் என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வதிகளுக்காக வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கியினால் பெறப்பட்ட ஆதனம்)*

இவ்வாதனம் 18.07.2006 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 23.10.1998 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 06.10.1998 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்", "தினமின" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கம்பளை நகரத்திலிருந்து நாவலப்பிட்டி பாதையில் சுமார் 1/2 மைல் தூரம் சென்றால் தேசிய வீடமைப்புத் திட்டத்தைக் காணலாம். இவ்வாதனம் நாவலப்பிட்டி பாதையில் இரண்டு கடைகளுக்கு நடுவில் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :

கொள்முதல் விலையில் 10%, உள்நாட்டு வரி 1%, ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2, நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி தலைமை அலுவலகத்தில் அல்லது கொள்ளுப்பிட்டி கிளையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட், இல. 285, காலி வீதி, கொழும்பு 03 என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 011-2577280, 253546, 2577281. தொலைநகல் இல. 011-2575448.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம்பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி.
தொலைபேசி இல. 081-2211025, 0714-755974, 0714-213497.
தொலைநகல் இல. 081-2211025.

6-622/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.